1987 ஏப்ரல் 8]

குறைபாடு இருந்தால், கவனத்திற்கு கொண்டு வந்தால், உரிய அதிகாரிக்கு அனுப்பி, குறைபாட்டினை நீக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். தியாகராசன்: சபாநாயகர் அவர்களே, இந்த நில அளவையைப் பொறுத்தவரையில் கிராமங்களில் போய் விசாரிக்காமல், அளவையாளர்கள் ஒரு சில இடங்களில் பார்த்துவிட்டு, மற்ற நிலங்களை அவர்கள் நேரடியாகச் சென்று பார்க்காமல், அவர்களை யார், யார் அணுகுகிறார்களோ, என்ன சொல்கிறார்களோ அந்த முறையிலே வரைபடம் தயார் செய்து, பட்டா புத்தகம் கொடுத்து விடுகிறார்கள். விருத்தாசலத்தில் இப்படிப் பட்ட கேஸ்கள் 25 இருக்கின்றன. அவர்கள் அத்தனை பேர்களும் ஏழை எளிய மக்கள். அவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் அவர்களுக்கு நியாயம் வழங்க அதிகாரிகளை மீண்டும் அந்த ஊர்களுக்கு அனுப்பி, மறு அளவை செய்து சரியான பட்டா புத்தகம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நிலங்களை எல்லாம் புதிதாக அளந்து, நில உரிமைப் பதிவேடு தரவேண்டுமென்ற நோக்கத்திலேதான் அதிகாரிகளை நியமித்து, சம்பளம் தந்து, படி தந்து, மற்ற வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். நாம் தெரிவித்த முறைப்படி அவர்கள் அந்தப் பணியைச் செய்யாமல், அவர்களிடம் வந்து சொன்னவர்கள் கொடுத்த விவரங்களை வைத்து பணியாற்றியிருந்தால் தவறு; அது குற்றமுமாகும். இப்படிப்பட்ட குறைபாடு வந்தால் அதன்மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். அப்பீல் என்ற முறையில் அவர்கள் மேல்முறையீடு செய்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல். மறுபடியும் அந்த ஊர்களுக்குச் சென்று விசாரித்து, உண்மையான அளவுப்படி விவரங்கள்படி பட்டாப் புத்தகம் வழங்க வருவாய்த் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

சென்னையில் மேலும் ஒரு பல் மருத்துவக் கல்லூரி.

123—(* வினா எண் 5420) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் மேலும் ஒரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1987 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவரவர்களே, இப்போது இருக்கும் பல் மருத்துவக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்? எத்தனை பேர் ஆண்டுதோறும் விண்ணப்பம் செய்கிறார்கள்? என்ன தகுதி அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சென்னையில் இருக்கிற பல் மருத்துவக் கல்லூரியில் இருக்கிற இடங்கள் 45. ஆண்டுதோறும் 45 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால் எவ்வளவு பேர் விண்ணப்பம் செய்கிறார்கள் என்ற விவரம் இல்லை. அந்த 45 பேர்களில் மத்திய அரசுக்கு 4 இடங்கள்; இராணுவத்தில் பணியாற்றும்போது இறந்துபோன தமிழ் வம்சாவழியினருக்கு 1 இடம்; வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் வம்சாவழியினருக்கு 1 இடம்; பி.எஸ்சி. பட்டதாரிகளுக்கு 2 இடங்கள்; மற்றவர்களுக்கு 37 இடங்கள்; ஆக மொத்தம் 45 இடங்கள் இருக்கின்றன.

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பல் மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன? தென் மாவட்டங்களின் கோரிக்கையை மனதிற்கொண்டு மதுரையில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சென்னையில் இருப்பதுபோல் சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி அமைய இருக்கிறது. மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் குறிப்பு தற்சமயம் அரசிடம் இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இடங்களுக்கு முன்னுரிமை வழங்கி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு அதிலே வழங்கப்படும் என்ற குறிப்பு இல்லை. எனவே அவர்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அந்தக் குறிப்பு இல்லை.

1987 ஏப்ரல் 8]

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது சிதம்பரத்தில் பல் மருத்துவக் கல்லூரி இருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய வகையில் அங்கு எத்தனை இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக் கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தில் பல் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு அனுமதி அளித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட் டிருக்கின்ற மற்ற விவரங்கள் குறித்து தனியாகக் கேள்வி போட் டால் முழு விவரமும் சேகரித்துத் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை

124—(* வினா எண் 9157) திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக இருந்தும் கூட இன்றையதினம் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத்தான் அது இருக்கிறது. அதனை 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவ மனையாக உயர்த்துவதற்குரிய திட்டம் அரசினிடத்தில் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படி இருந்தால் அந்த வேலை எப்போது தொடங்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.